அ.வ.எண்: 45/2013 நாள்: 18.02.2026

வா.சா.3 –

முகம்மது சித்திக்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை:</u>**

1. பெரிய காரை குரூப்பில் உள்ள சர்வே எண். 75/19 வருவாய் துறை ஆவணங்களில் என்ன வகைப்பாடாக உள்ளது என்றால் அரசு புறம்போக்கு நத்தமாக உள்ளது அதன் விஸ்தீரணம் என்ன என்றால் 1.10 ஏர்ஸ் சுமார் மூன்று செண்ட் அளவில் உள்ளது. சர்வே எண் 75/19 க்கு கிழக்கே என்ன சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண் 75/20 உள்ளது. மேற்படி சர்வே எண். 75/20 தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே 75/20 ஏ பழனிக்குமார் பெயரில் உள்ளது சர்வே நம்பர் 75/20 பி நீலமேகம் பெயரில் உள்ளது. மேற்படி பழனிகுமார் மற்றும் நீலமேகம் பெயரில் பட்டா ஏற்படுவதற்கு முன்பு சர்வே எண். 75/20 யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் நீலமேகம் மகன் மாரியப்பன் பெயரில் பட்டா உள்ளது. நான் மேற்கொண்ட விசாரணையில் மாரியப்பன் என்பது வாதியின் கணவர் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சர்வே எண். 75/20 மற்றும் சர்வே 75/19

அடுத்தடுத்த சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே 75 19 க்கு மேற்கே என்ன உள்ளது என்றால் சர்வே எண் 74 உள்ளது.

2. மேற்படி சர்வே எண். 74 தற்போது யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் நான் அதற்கான ஆவணங்களை கொண்டு வரவில்லை அதனால் சொல்ல இயலாது. சர்வே எண் 75/19 க்கு தெற்கு என்ன உள்ளது என்றால் சர்வே 75/ 3 உள்ளது . மேற்படி சர்வே எண் 75/3 யார் பெயரில் உள்ளது என்றால் "அ" பதிவேட்டின் படி மாரிமுத்து பெயரில் உள்ளது. சர்வே எண் 75/3 இல் உள்ள மாரிமுத்து என்பவரும் சர்வே எண் 75/20 இல் உள்ள மாரியப்பன் என்பவரும் ஒரே நபர்தான் என்றால் சரிதான். சர்வே நம்பர் 75/19 வடக்கே என்ன உள்ளது என்றால் சர்வே எண் 75/1 உள்ளது. மேற்படி சர்வே 75/1 என்னவாக உள்ளது என்றால் அரசு புறம்போக்காக உள்ளது. சர்வே எண் 75 /19 –ஐ சர்வே எண் 75/20–னுடன் சேர்த்து கல்லு கால்கள் ஊன்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் விசாரணையில் மேற்படி கள்ளுக்காலை யார் அமைத்ததாக தெரியவந்தது என்றால் மாரிமுத்து என்பவர் அமைத்ததாக தெரியவந்தது. மேற்படி மாரிமுத்து வாதிலட்சுமியின் கணவர் என்றால் சரிதான்.

3. சர்வே எண் 75/20 காலி இடமாக உள்ளதா அல்லது வீடு உள்ளதா என்றால் வீடு உள்ளது. மேற்படி வீடு எந்த திசையில் வாசல் வைத்து கட்டப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. மேற்படி வீடு வாதி லட்சுமிக்கு பாத்தியம் என்று என் விசாரணையின்

மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சர்வே எண். 75/9 என்னுடைய விசாரணையில் என்னவாக உள்ளதாக தெரிந்து கொண்டேனா என்றால் அதில் ஆஸ்பெஸ்டாஸ் கொட்டகை அமைத்து மற்ற இடம் காலியிடமாக உள்ளது. மேற்படி கொட்டகையை யார் அமைத்தது என்றால் லட்சுமி அமைத்ததாக எனது விசாரணையின் மூலம் தெரிந்து கொண்டேன். சர்வே எண். 75/19 க்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் பட்டா வழங்கப்பட்டு பின்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண். 75/19 எப்பொழுது யார் பெயரை பட்டா வழங்கப்பட்டது என்றால் 1995 ஆம் வருடம் குருந்தப்பன் மகன் நடராஜன் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.11995 மேற்படி பட்டா 1.1..1995 அன்று வழங்கப்பட்டது பின்பு 17.11. 1995 அன்று ரத்து செய்யப்பட்டது என்ன காரணத்திற்காக பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் ஆணையின் குறிப்பு மட்டும் தான் எழுதப்பட்டிருக்கும் எதற்காக ரத்து செய்யப்பட்டது என்று குறிப்பில் எழுதப்பட வில்லை.

4. மேற்படி சர்வே எண் 75/19 இல் இருந்து பிரதிவாதி வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி சர்வே எண் 75/19 க்கு அருகே பிரதிவாதிகளுக்கு இடம் உள்ளதா என்றால் மேற்படி சர்வே எண்ணின் நான்குமாலில் இல்லை. மேற்படி சர்வே எண் தொடர்பாக இதே நீதிமன்றத்தில் வேறு வழக்கில் சாட்சியும் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்கொண்ட விசாரணையில் மேற்படி சர்வே எண் 75/19 தொடர்பாக

வேறு வழக்கு நடைபெற்ற விவரங்கள் தெரிய வந்ததா என்றால் அவ்வாறு ஏதும் தெரியவில்லை. சர்வே 75/20 எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 02.05.2025 அன்று உட்பிரிவு செய்யப்பட்டது. உட்பிரிவு செய்யப்பட்ட பழனிக்குமார் மற்றும் நீலமேகம் ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான்.

<u>5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சர்வே எண் 75/20 இலவச வீட்டு ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் அதுபோன்று ஏதும் குறிப்பிடப்படவில்லை. நத்தம் காலத்தில் இருந்து அந்த பெயர் வந்துள்ளது மேற்படி சர்வே எண் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 3.20 இயர்ஸ் சுமார் 9 ¼ சென்ட் அளவு உள்ளது. மேற்படி சர்வே எண்.75/20-க்கு ஆதியில் யார் பெயரை பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் நத்தம் செட்டில்மென்ட் காலத்தில் நீலமேகம் மகன்மாரியப்பன் பெயரில் இருந்தது. மேற்படி சர்வே எண் தற்போது மாரியப்பனின் மகன்களின் பெயரில்தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எதை வைத்து மாரிமுத்து மற்றும் மாரியப்பன் ஆகிய ஒரே நபர் என்று சொல்கிறேன் என்றால் எனது விசாரணையில் அவர் பொதுவாக அழைக்கப்படும் பெயர் என்று தெரியவந்தது அதனால் அழைக்கப்படும் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை. சர்வே எண் 75 / 19 க்கு 1 ம் பிரதிவாதி ஆன நடராஜன் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி நடராஜன் தற்போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். சர்வே எண் 75/3 வாதியின் கணவரான மாரிமுத்து பெயரில் சுமார் 15 சென்ட் அளவு உள்ள இடத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே 75/3 மற்றும் சர்வே எண் 75/20 ஆகியவை அருகில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே எண் 75/19 மற்றும் 75/20 ஆகியவை ஒரு சேகரமாக இல்லை என்றும் மேற்படி இரண்டு சுற்றும் இடையில் ஒரு சந்து உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல இரண்டும் ஒரு சேகரமாகத்தான் உள்ளது. மேற்படி சர்வே 75/19 சொத்து சம்பந்தமாக வாதியின் கணவர் இதே நீதிமன்றத்தில் ஓ.எஸ்.48/1996 என்ற வழக்கு தாக்கல் செய்து அதில் மேற்படி சொத்திற்கும் வாதியின் கணவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.18 15:53:00 +0530